மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற கணக்குப்படி ஸ்கூட்டருக்கு 15 சதவிகிதம் ஒருமுனை வரி இருப்பதால், வேறு இழப்பு இல்லை என்று கணக்கு இருக்கிறது. வேண்டுமானால் மீண்டும் இதை ஆராய்ந்து இதனால் வரி நஷ்டம் வரும் என்றால் மறுபரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

சிதம்பரம் காட்டுமன்னார்கோயில் தாலுக்காக்களை இணைத்து தனி வருவாய் கோட்டமாக்கும் திட்டம்.

*வினா எண். 1042 திரு. வி வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் காட்டுமன்னார் கோயில், கடலூர், பண்ருட்டி ஆகிய நான்கு தாலூக்காக்கள் கொண்ட வருவாய்த்துறை டிவிஷனில் உள்ள சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் தனியாகப் பிரித்து ஒரு சப்-டிவிஷனாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உள்ளது.

திரு. வி.வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் ஏற்கனவே வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடமும் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு வீடும், தாசில்தாருக்கு வீடும் இருக்கின்றன மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் ஆய்வாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். ஆகவே சிதம்பரம் தாலூகாவையும், காட்டுமன்னார் கோவில் தாலூகாவையும் தனியாகப் பிரித்து, சிதம்பரத்திலே ஒரு வருவாய்க்கோட்ட அலுவலகமும் காட்டுமன்னார் கோவிலில் ஒரு வருவாய்க் கோட்ட அலுவலகமும், தனியாக அமைப்பதற்கு இந்த நிதி ஆண்டிலேயே அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விருத்தாசலம், திருக்கோவிலூர், திண்டிவனம் ஆகிய 4 கோட்டங்கள் இருக்கின்றன. சிதம்பரம் கோட்டத்தைப் பொறுத்த வரையில் சிதம்பரம், கடலூர், பண்ருட்டி ஆகிய 3 தாலூகாக்கள்தான் முன்னாலே இருந்தன. இப்போது காட்டுமன்னார் கோவில் தாலூகா சென்ற ஆண்டு ஏற்பட்டது. ஆனால் 3-3-1981 வரையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்து முடிக்கும் வரையில் புதிதாக எந்தவிதமான நிர்வாக மாற்றமும் செய்யக் கூடாது என்ற மத்திய அரசின் ஆணைக்கேற்ப இதைச் செய்யவில்லை. ஆனால் அதற்குப் பிறகு 5-5-1981 அன்று வருவாய்த்துறை அமைச்சருடைய தலைமையில், வருவாய் ஆணையர், வருவாய்த் துறை செயலாளர், நிதித் துறை செயலாளர் ஆகியோரை வைத்து, சிதம்பரம் கோட்டம் மிகப்பெரிய கோட்டமாக இருக்கின்ற காரணத்தால், அதை இரண்டாகப் பிரிக்க அரசு வேண்டிய ஆணையை இட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.